S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன்
ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ,
ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 347 09.06.2026 TUESDAY VAIKASI : 26 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 347 09.06.2026 செவ்வாய்கிழமை வைகாசி : 26 விலை : ரூ.5/–

# மின்துறையில் விரைவில்
# “15,000 பேர் பணி நியமனம்”
## அமைச்சர் நிர்மல்குமார்

சென்னை: ஜூன்.9-

மின்துறையில் புதியதாக 15,000 பேரை முதல்கட்டமாக பணி அமர்த்த உள்ளோம் என்று மின்துறை அமைச்சர் நிர்மல்குமார் கூறி உள்ளார்.

அவர் அளித்த பேட்டி;

சில நாட்கள் முன்பாக உதவி பொறியாளர்கள் 300 பேர் செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். 15 ஆண்டுகாலமாக காத்திருந்த பதவி உயர்வை அளித்துள்ளோம். ஊழியர்களுக்கு நிலுவையில் உள்ள பல்வேறு விஷயங்களை நிவர்த்தி செய்யும் பணிகளை தொடங்கி இருக்கிறோம்.




மின்துறையில் ஊழியர்கள் அதிகளவு பணிச் சுமையில் இருந்து வருகின்றனர். இதற்கும் மேல் காத்திருக்காமல் அவர்களுக்கு தேவையான பதவி உயர்வுகளை வழங்கி உள்ளோம். அடுத்தடுத்த கட்டங்களில் நிலுவையில் உள்ள பதவி உயர்வுகள் அளிக்கப்படும்.

தற்போது உள்ள சூழலில்,70000 ஊழியர்கள் பற்றாக்குறை உள்ளது. முதல்கட்டமாக 15,000 பேரை புதியதாக தேர்வு செய்ய இருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மின்சார வாரியத்தை சீரமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

பதவி உயர்வானது இப்போது தான் அளிக்கப்பட்டு உள்ளன. இது கடந்த 15 ஆண்டுகால நிலுவையில் உள்ள பதவி உயர்வாகும். கோர்ட் ஆணை பெற்ற பின்னரும், அவர்களுக்கு பதவி உயர்வ அளிக்கப்படவில்லை. அதை கவனத்துக்கு கொண்டு வந்தவுடன் பதவி உயர்வு அளித்துள்ளோம்.

இவ்வாறு அமைச்சர் நிர்மல்குமார் கூறினார்.

## மின்துறை ஹார்டு டிஸ்க் திருட்டு வழக்கை சிபிஐ விசாரிக்க அதிமுக கோரிக்கை

சென்னை: ஜூன்.9-

அதிமுக ஐடி விங்க் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “மின்துறையில் ஹார்டு டிஸ்க் திருடு போன வழக்கை ஏன் சிபிசிஐடி யிடம் ஒப்படைக்கவில்லை என நாம் 3 நாட்கள் முன்பு கேள்வி எழுப்பியிருந்த நிலையில், தற்போது மிகவும் தாமதமாக சிபிசிஜடி விசாரணைக்கு உத்தரவிடப்ட்டுள்ளது.




இதற்கு எதற்கு இத்தனை நாட்கள்?. திருடு போன முதல் நாளே செய்ய வேண்டிய வேலையை ஏறத்தாழ ஒரு வாரம் தாமதம் செய்துள்ளதன் பின்னணி என்ன?. செய்திகளில் வரும் வரை இதுபற்றி அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம் தராமல் மறைத்து வைத்திருந்ததே பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது வெறும் ஹார்டு டிஸ்க் திருட்டு மட்டுமல்ல. தரவுகள் திருடப்பட்டிருக்கும் வாய்ப்புகள் மிக அதிகமாக உள்ளன. தரவுகள் திருட்டு பற்றி உங்கள் அரசின் காவல்துறையே விசாரிப்பதை இனிமேல் எப்படி நம்ப முடியும்?. நியாயமான விசாரணை நடத்தி உண்மை வெளிவர வேண்டும் எனில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கோரியபடி சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

## அண்ணாமலையின் ‘வீ த லீடர்ஸ்’ இயக்கத்தில் உறுப்பினர்களை சேர்க்க சிறப்பு முகாம்கள்
### 10 நாளில் 40 லட்சம் பேரை சேர்க்கும் பணி தீவிரம்

சென்னை: ஜூன்.9-

கிராமங்கள், நகரங்கள், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் அண்ணாமலையின் `வீ த லீடர்ஸ்' இயக்கத்தில் உறுப்பினர்களை சேர்க்க சிறப்பு முகாம்களை அவரது ஆதரவாளர்கள் நடத்தி வருகின்றனர்.



10 நாட்களில் 40 லட்சம் உறுப்பினர்களை இயக்கத்தில் இணைக்க தீவிர களப்பணியாற்றி வருகின்றனர். தமிழக பாஜகவின் முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை, அக்கட்சியிலிருந்து விலகி `வீ த லீடர்ஸ்' என்ற புதிய அரசியல் இயக்கத்தைத் தொடங்கியுள்ளார்.

இதையடுத்து, தமிழக பாஜகவில் முக்கியப் பொறுப்புகளில் வகித்து வந்த முன்னணி நிர்வாகிகள் பலரும், தங்களது பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு, தங்களது ஆதரவாளர்களுடன் கூட்டமாக அண்ணாமலையின் இயக்கத்தில் தங்களை இணைத்து வருகின்றனர்.

குறிப்பாக, கரு.நாகராஜன், சுமதி வெங்கடேசன் ஆகியோரைத் தொடர்ந்து, மாநில செயற்குழு உறுப்பினர் மனோகரன், மாநில செயலாளர் அலிசா அப்துல்லா உள்ளிட்ட பலரும் பாஜகவிலிருந்து விலகி வீ த லீடர்ஸில் இணைந்து வருகின்றனர்.

இந்நிலையில், அண்ணாமலையின் புதிய இயக்கம் உறுப்பினர் சேர்க்கையில் வேகத்தைக் காட்டி வருகிறது. அண்ணாமலை இயக்கம் தொடங்கிய முதல் 10 மணி நேரத்தில், 10 லட்சம் பேர் இணைந்தனர்.

மூன்றாவது நாளான நேற்று உறுப்பினர் சேர்க்கை 16 லட்சத்தைக் கடந்துள்ளது. இந்நிலையில் உறுப்பினர்கள் சேர்க்கையை மேலும் அதிகரிக்கச் சிறப்பு முகாம்களை அவரது ஆதரவாளர்கள் நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து அண்ணாமலையின் இயக்கத்தில் இணைந்துள்ள முன்னாள் பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் மனோகரன் கூறுகையில், ``சென்னை மேற்கு மாவட்டத்திலிருந்து மட்டுமே பாஜக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என 80 சதவீதம் பேர் கட்சியிலிருந்து விலகி, அண்ணாமலையின் இயக்கத்தில் இணைந்துள்ளோம்.

துடிப்பான ஓர் இளம் தலைமையை விரும்பி, இந்த இயக்கத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். `வீ த லீடர்ஸ்' இயக்கத்தில் இணைய கிராமப்புற மக்களும், பாமர மக்களும் மிகுந்த ஆர்வம் காட்டிவருகின்றனர்.

ஆனால் அவர்களுக்கு ஆன்லைன் மூலம் எவ்வாறு இணைவது என்று தெரியாததால், அவர்களின் வசதிக்காக அனைத்து கிராமப்புறங்களிலும் சிறப்பு உறுப்பினர் சேர்க்கை முகாம்களை நடத்த தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அதேபோல், நகர்ப்புறங்களில் பொதுமக்கள் அதிகம் கூடும் முக்கிய இடங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. ஏற்கெனவே பல இடங்களில் இந்த முகாம்கள் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டுவிட்டன.

3 நாளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 16 லட்சத்தைக் கடந்துள்ள நிலையில், அடுத்த 7 நாட்களில் மேலும் 20 லட்சம் பேர் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே 10 நாட்களில் குறைந்தது 40 லட்சம் உறுப்பினர்களை இயக்கத்தில் சேர்க்க இலக்கு நிர்ணயித்து, நாங்கள் தீவிரமாகப் பணியாற்றி வருகிறோம்'' என்றார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## அத்திக்கடவு திட்டத்தோடு நல்லாற்றை இணையுங்கள்!
### திருப்பூர் வடக்கு எம்எல்ஏவிடம் நல்லாறு பாதுகாப்பு இயக்கம் அவசர நினைவூட்டல்!

திருமுருகன்பூண்டி. ஜூன் 9:

“அவிநாசி தொகுதியின் பிரதான நீர் ஆதாரமான நல்லாற்றை அத்திக்கடவு அவிநாசி திட்டத்தின் ஒரு பகுதியாக இணைத்துச் சீரமைக்க வேண்டும்“ என்று திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் சத்தியபாமா அவர்களிடம், திருமுருகன்பூண்டி அம்மாபாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நல்லாறு பாதுகாப்பு இயக்கம் சார்பில் நினைவூட்டல் கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது.



‘அத்திக்கடவு அவிநாசி’ திட்டத்தின் முழுமையான பலன் கடைக்கோடி விவசாயிக்கும், பொதுமக்களுக்கும் போய்ச் சேர வேண்டும் என்றால், உபரி நீர் செல்லும் பாதையான நல்லாற்றைச் சீரமைப்பதும், நஞ்சராயன் குளம் பறவைகள் சரணாலயத்தைக் காப்பதும் தான் ஒரே தீர்வு என்பதைத் திருப்பூர் வடக்கு எம்.எல்.ஏ சத்தியபாமா அவர்களுக்கு நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர் தங்களது நினைவூட்டல் கடிதம் மூலம் பறைசாற்றியுள்ளனர்!

அந்த மனுவில், “தாமரைக்குளம் சங்கமாங்குளத்திலிருந்து உபரியாக வரும் அவிநாசி அத்திக்கடவு நீர், நல்லாறு வழியாகச் சென்று புகழ்பெற்ற நஞ்சராயன் குளம் பறவைகள் சரணாலயத்தை அடைகிறது. எனவே, இந்த ஆற்றுப் பாதையை முழுமையாகத் தூர்வாருவதோடு, ஆற்றில் கலக்கும் சாயக்கழிவுகள் மற்றும் நகராட்சிக் கழிவுநீரைத் தடுக்க, ஒவ்வொரு பஞ்சாயத்துகளின் மூலமும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைத்துத் தூய்மையான நீரை மட்டுமே ஆற்றில் விட நடவடிக்கை எடுக்க வேண்டும்“ என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.


நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்கவும் இத்திட்டம் மிக அவசியமானது என்பதால், பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, ஊடகங்கள் மற்றும் அரசுத் துறைகள் வாயிலாகத் தொடர்ந்து போராடி வரும் நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர், “மக்கள் பிரதிநிதியாகிய தாங்கள் இந்த உன்னத நற்பணியில் முன்நின்று வழிநடத்த வேண்டும். நல்லாற்றை மேம்படுத்த உங்களோடு பாரபட்சமற்ற ஆலோசனைகளை வழங்கி, எப்போதும் உறுதுணையாகப் பயணிக்கத் தயாராக இருக்கிறோம்“ என்றும் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

## பழநி முருகன் கோயிலில் பக்தர்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார் அமைச்சர் ரமேஷ்

பழநி: ஜூன்.9-

பழநி முருகன் கோயிலில் செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்து பக்தர்களிடம் கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சர் எஸ்.ரமேஷ், அதிகாரிகளிடம் பல்வேறு கேள்விகளையும் எழுப்பினார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எஸ்.ரமேஷ், திங்கட்கிழமை (நேற்று) காலை பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு வந்தார். அவரை, பழநி கோட்டாட்சியர் கண்ணன், கோயில் இணை ஆணையர் மாரிமுத்து உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்றனர்.



தொடர்ந்து, பழநி கொடைக்கானல் சாலையில் ரூ.53 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார நுழைவு வாயில் மற்றும் மேற்கு ரத வீதியில் ரூ.52 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள ராக்கால நந்தவனத்தை அமைச்சர் எஸ்.ரமேஷ் திறந்து வைத்தார்.

இதையடுத்து, ரூ.100 கோடியில் நடைபெற்று வரும் பெருந்திட்ட வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை அமைச்சர் ஆய்வு செய்தார். அப்போது, வின்ச் ரயிலில் செல்ல வரிசையில் காத்திருக்கும் பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட வசதிகள் குறித்து ஆய்வு செய்து, பக்தர்களிடம் குறைகளை கேட்டறிந்தார். பக்தர்கள் காத்திருக்கும் அறையில் நோய் பாதித்த நாய் இருந்ததை பார்த்து உடனே அப்புறப்படுத்த நகராட்சி சுகாதார பணியாளர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், வரிசையில் காத்திருக்கும் பக்தர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கழிப்பறை எண்ணிக்கை குறைவாக இருப்பதால் கூடுதல் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்த உத்தரவிட்டார். தொடர்ந்து, பயன்பாடின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள புதிய வின்ச் ரயிலை இயக்காதது குறித்தும் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார். பஞ்சாமிர்தம் தயாரிப்பு மையத்தை ஆய்வு செய்து தயாரிக்கப்படும் பஞ்சாமிர்தம், விற்பனையாகும் பஞ்சாமிர்தம் குறித்து கேட்டறிந்தார்.

இதற்கிடையே, அமைச்சர் ஆய்வுக்கு வருவது குறித்தும், அலங்கார நுழைவு வாயில் மற்றும் நந்தவனம் திறப்பு விழா குறித்து பழநி தொகுதி அதிமுக எம்எல்ஏ ரவிமனோகரனுக்கு தகவல் தெரிவிக்காதது குறித்து அவரது ஆதரவாளர்கள் அமைச்சரிடம் புகார் தெரிவித்தனர். உடனே அமைச்சர், எனக்கு கொடுக்கும் மரியாதையை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி எம்எல்ஏவுக்கும் கொடுக்க வேண்டும் என கோயில் இணை ஆணையரிடம் கண்டிப்புடன் தெரிவித்தார்.

தொடர்ந்து, எம்எல்ஏ ரவிமனோகரனை சந்தித்து அமைச்சர் வருத்தம் தெரிவித்து அவரை சமாதானப்படுத்தினார்.

பின்னர், ரோப் கார் மூலம் மலைக்கோயிலுக்கு சென்று அமைச்சர் சுவாமி தரிசனம் செய்தார். அங்கு பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள், அன்னதான கூடம், உணவு தயாரிக்கும் கூடத்தை அமைச்சர் ஆய்வு செய்தார். மாலையில் அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்த உள்ளார்.

# சென்னை மாநகராட்சியில் சட்ட விதிப்படி சொத்து கணக்கை மேயர் பிரியா உள்ளிட்ட 157 கவுன்சிலர்கள் அளிக்கவில்லை

சென்னை, ஜுன்.09–

மாநகராட்சியில் மேயர் பிரியா உள்ளிட்ட 157 கவுன்சிலர்கள் சட்ட விதிகளின்படி சொத்துக் கணக்கை அளிக்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக அரசு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டத்தை கடந்த 1998ம் ஆண்டு கொண்டு வந்தது. இதில் கடந்த 2022ம் ஆண்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதில் 34ஏ என்ற புதிய விதி சேர்க்கப்பட்டது.

அதில், ``நகர்ப்புற உள்ளாட்சிகளில் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள், துணை தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் மற்றும் கவுன்சிலர்கள் தங்கள் சொத்துக் கணக்கு, தங்கள் மனைவி, குழந்தைகளின் சொத்துக் கணக்குகளை பதவியேற்ற 90 நாட்களுக்குள் மாநகராட்சியில் சமர்ப்பிக்க வேண்டும்'' என கூறப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து 2023ம் ஆண்டு தமிழ்நாடு நகரப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் கொண்டுவரப்பட்டன. அதில் 183வது விதியில், ``அந்த சொத்துக் கணக்கு விவரங்களை மாநகராட்சி ஆணையரிடம் வழங்க வேண்டும். அதை ஆணையர் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்'' என கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் சங்கர் என்பவர் சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள் தாக்கல் செய்த சொத்துக் கணக்கு விவரங்கள் குறித்து, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்த மாநகராட்சி நிர்வாகம், ``சென்னை மாநகராட்சியில் உள்ள 200 வார்டு கவுன்சிலர்களில் 157 பேர் சொத்துக் கணக்கை தாக்கல் செய்யவில்லை. இதில் 4 பேர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டனர்.

2 பேர் தகுதி நீக்கம் செய்யப்பட்டுவிட்டனர். 43 கவுன்சிலர்கள் மட்டுமே தங்கள் சொத்துக் கணக்கை தாக்கல் செய்துள்ளனர்'' என தெரிவித்திருந்து. சொத்துக் கணக்கை தாக்கல் செய்யாதவர்கள் பட்டியலையும் மாநகராட்சி வழங்கியுள்ளது.

அதில் மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளிட்ட 157 கவுன்சிலர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இவர்களின் பதவிக்காலம் இன்னும் 8 மாதங்கள் மட்டுமே உள்ள நிலையில், அரசின் விதிகளை மதிக்காமல் மக்கள் பிரதிநிதிகளாக தொடர்ந்து வருவது சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது.

இவர்கள் மீதான நடவடிக்கை தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்டபோது, ``சட்ட விதிகளில் தலைமை, துணை தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள், கவுன்சிலர்கள் பதவியேற்ற 90 நாட்களுக்குள் சொத்துக் கணக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று தான் உள்ளது.

தவறினால், அவர்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக எந்த அம்சங்களும் இடம்பெறவில்லை. இருப்பினும் 30 நாட்களுக்குள் தங்கள் சொத்துக் கணக்குகளை தாக்கல் செய்யுமாறு அனைத்து கவுன்சிலர்கள், மேயர், துணை மேயருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது'' என்றனர்.

# கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் முதல் தவணை பணம் கூட விடுவிக்கப்படவில்லை என வேதனை

சாத்தான்குளம், ஜுன்.09

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் வீடு கட்டி வருவதற்கு முதல் தவணை பணம் கூட விடுவிக்கப்படவில்லை என வேதனை. விரைவில் பணம் வழங்கினால் தான் வீட்டுப் பணிகளை முடிக்க முடியும் என பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் கூடுதல் ஒதுக்கீடு மூலம் அனைவருக்கும் வீடு பட்டியலில் இடம் பெற்றுள்ள பயனாளிகளுக்கு வீடு கட்ட சிறப்பு கிராம சபை மூலம் பலர் தேர்வு செய்யப்பட்டனர்.இதில் முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. .இந்த வீடு கட்டுவதற்கு 3.50 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது . வீடு கட்டும் பணிகளைத் தொடங்கிய பின் அடித்தளம், ஜன்னல் மட்டம், மேற்கூரை மட்டம், மற்றும் பணி முடிந்த பிறகு என நான்கு தவணைகளாக பணம் விடுவிக்கப்படும் . இலவச வீடு கட்டுவதற்கான வேலை ஒப்புதல் ஆணை வழங்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் அவர்கள் அடித்தளம் அமைக்காவிட்டால் அந்த ஆணை ரத்து செய்யப்படும் என உத்தரவில் கூறப்பட்டதால் பயனாளிகள் தங்கள் வீட்டுப் பணிகளை தொடங்கி விட்டனர். பலரும் அஸ்திவாரம் போட்ட நிலையில் ஒரு சிலர் ஜன்னல் மட்டம் மற்றும் மேற்கூரை வரைக்கும் வேலைகளை செய்து விட்டார்கள். தற்பொழுது முதல் தவணைப் பணம் 85 ஆயிரம் கூட விடுவிக்கப்படாததால்



பணிகளைத் தொடர முடியாமல் சிரமத்தில் உள்ளனர். தற்பொழுது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது இனிமேல் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கினால் தான் பணம் விடுவிக்கப்படும் என்று கூறப்படுகிறது .பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கிய ஆணைகள் ரத்து செய்யப்பட மாட்டாது .பணம் ஒதுக்கிய பிறகுதான் பணம் வழங்கப்படும் என்று சம்பந்தப்பட்ட துறையினர் கூறுவதாக கூறுகின்றனர். இது சம்பந்தமாக இலவச வீடு கட்டுவதற்கு ஆணை பெற்றவர்கள் தினசரி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வந்த வண்ணம் உள்ளனர். எனவே ஏற்கனவே வீட்டு வேலைக்கான உத்தரவு வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு அவர்கள் வீடு கட்டுவதற்கான முதல் தவணைப் பணங்களை விடுவிக்க வேண்டும். மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற பயனாளிகளுக்கும் வீடு கட்டுவதற்கான ஆணையை வழங்க வேண்டும் என இலவச வீடு கட்டுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் இலவச வீடு கட்ட அனுமதி வாங்கியவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கூட்ட நெரிசல், விரைவு தரிசன மோசடியை தடுக்க கோயில்களில் விரைவில் ஆன்லைன் டிக்கெட் முன்பதிவு

சென்னை, ஜுன்.09–

கூட்ட நெரிசல், விரைவு தரிசன மோசடியைத் தடுக்க கோயில்களில் ஆன்லைன் டிக்கெட் முன்பதிவு முறையை விரைவில் அறிமுகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் திருச்செந்தூர், திருவண்ணாமலை, சமயபுரம், பழனி உள்ளிட்ட முக்கிய கோயில்களுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

இதனால், நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, விரைவாக சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்வதாகக் கூறி பக்தர்களிடம் சிலர் பணம் பறித்து மோசடியில் ஈடுபடுவதாக அறநிலையத் துறைக்கு தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் இடைத்தரகர்களின் நடமாட்டத்தைத் தடுக்கவும், கூட்ட நெரிசலை முறைப்படுத்தவும் முக்கியக் கோயில்களில் ஆன்லைன் டிக்கெட் முன்பதிவு மற்றும் நேர ஒதுக்கீட்டு முறையை விரைவில் அறிமுகம் செய்ய அறநிலையத் துறை திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக, சில நாட்களுக்கு முன்பு அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் தலைமையில் ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றது. அப்போது இதுகுறித்து அதிகாரிகளிடம் அமைச்சர் விவாதித்தார்.

இந்நிலையில் தற்போது, பக்தர்கள் நீண்ட வரிசையில் பல மணிநேரம் காத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, இந்தத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த திட்டத்தின் மூலம், பக்தர்கள் தங்களின் செல்போன் அல்லது கணினி வாயிலாக, தாங்கள் வர விரும்பும் தேதி மற்றும் உகந்த நேரத்தை முன்கூட்டியே தேர்வு செய்து கொள்ளலாம்.

இனிவரும் காலங்களில், ஆன்லைன் மூலம் பெறப்பட்ட இந்த இடிக்கெட் வைத்திருப்பவர்கள் மட்டுமே கோயிலுக்குள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பண்டிகை நாட்கள், வார இறுதி நாட்கள் மற்றும் முக்கியத் திருவிழாக் காலங்களுக்கும் இந்த ஆன்லைன் முன்பதிவு முறை கட்டாயமாக்கப்பட உள்ளது.

# தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு மத்திய அரசு ரூ.531 கோடி

சென்னை, ஜுன்.09–

தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் மேம்பாலங்கள் அமைக்கும் பணிகளுக்காக நடப்பு நிதியாண்டில் (2026–27) ரூ.531.54 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

சமீபத்திய புள்ளி விவரங்களின்படி, இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் சுமார் 1,46,560 கி.மீ. ஆகும். தேசிய நெடுஞ்சாலைகளில் சாலை அமைப்பதும், பராமரிப்பது உள்ளிட்ட பணிகளை மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஆகியவை மேற்கொள்கின்றன.

தேசிய நெடுஞ்சாலைகளில் மேம்பாலங்கள் அமைக்கும் பணிக்காக, 'சேது பந்தம் திட்டம்' 2016ம் ஆண்டு தொடங்கப்பட்டது. பின்னர் இது, சேது பாரதம் திட்டமாக மாற்றப்பட்டது. இத்திட்டத்தில், தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ரயில்வே கேட்களை அப்புறப்படுத்தி மேம்பாலங்கள் கட்டும் திட்டமும் விரிவுப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி, தேசிய நெடுஞ்சாலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், நாடுமுழுவதும் 230 ரயில்வே கேட்கள் தேசிய நெடுஞ்சாலைகளில் இருப்பது கண்டறியப்பட்டன. தமிழகத்தில் 9 ரயில்வே கேட்கள் கண்டறியப்பட்டு, தற்போது வரை 6 கேட்களை அகற்றி மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. திருச்சியில் மேம்பாலம் பணி முடியும் தருவாயில் உள்ளது.



நீடாமங்கலம் மேம்பாலப் பணி ரூ.170 கோடியில் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது. ஆம்பூர் ரெட்டித் தோப்பு பகுதியில் ரயில்வே மேம்பாலம் பணி ரூ.65.98 கோடியில் பணி நடைபெறுகிறது. இந்த இரண்டு பணிகளுக்காக நடப்பு நிதியாண்டில் ரூ.81.54 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுதவிர, தமிழகத்தில் நெடுஞ்சாலையில் உள்ள மேம்பாலப் பணிகளுக்கு நடப்பு நிதியாண்டில் ரூ.450 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மொத்தம் ரூ.531.54 கோடியை மேம்பால பணிகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதுகுறித்து, ஓய்வுபெற்ற ரயில்வே தொழிற்சங்க தலைவர் மனோகரன் கூறும்போது, "தமிழகத்தில் ரயில்வே கேட்களை அகற்றி, மேம்பாலம் அமைக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இதுபோல, நாடு முழுவதும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள ரயில்வே கேட்களை அப்புறப்படுத்த, சேது பாரதம் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்'' என்றார்.

# 2 கோடி பார்வையாளர்களை எட்டிய ராமேசுவரம் அப்துல் கலாம் நினைவகம்

ராமேசுவரம், ஜுன்.09–

ராமேசுவரத்திலுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் தேசிய நினைவிடத்துக்கு இதுவரை 2 கோடி பார்வையாளர்களுக்கு மேல் வந்து சென்றுள்ளதாக டி.ஆர்.டி.ஓ அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்துல் கலாம் குடியரசுத் தலைவர் பதவிக் காலத்துக்கு பிறகு நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு கல்வி நிறுவனங்களில் நடந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்று மாணவர்களுக்கு உத்வேகம் ஊட்டும் உரையாற்றி வந்தார்.

இந்நிலையில் கடந்த 2015 ஜுலை 27ம் தேதி மேகாலயா மாநிலம் ஷில்லாங்கில் உள்ள கல்லூரி விழாவில் பேசிக்கொண்டிருந்தபோதே உயிரிழந்தார். பின்னர் அவரது உடல், சொந்த ஊரான ராமேசுவரம் தீவில் உள்ள பேக்கரும்பில் அடக்கம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் அவரது நினைவாக மத்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) சார்பில் 'அப்துல் கலாம் தேசிய நினைவகம் அமைக்கப்பட்டு 2017ம் ஆண்டு ஜுலை 27ம் தேதி பிரதமர் நரேந்திரமோடி திறந்து வைத்தார்.



கலாம் நினைவகத்தின் நுழைவுப் பகுதியில் கலாம் வீணை வாசித்தபடி அமர்ந்திருக்கும் வெண்கலச் சிலை, கலாம் பயன்படுத்திய பொருட்கள், நூல்கள், உடைகள், கலாமின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் ஓவியங்கள், கலாமின் பல்வேறு கால கட்டப் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

மேலும் இங்குள்ள நான்கு காட்சிக் கூடங்களில் கலாமின் மாணவப் பருவம், விஞ்ஞானியாகப் பணியாற்றிய காலம், குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய காலம், உலகத் தலைவர்களுடன் கலாமின் புகைப்பட ஓவியங்கள் மற்றும் உருவச் சிலைகள், அவரது கண்டுபிடிப்பின் மாதிரி வடிவங்கள் ஆகியவையும் வைக்கப்பட்டுள்ளன.

உலகளாவிய கரோனா பரவலைத் தொடர்ந்து அரசு பொது முடக்க காலத்தில் கலாமின் தேசிய நினைவகம் 2020 மார்ச் 17 அன்று மூடப்பட்டு 525 நாட்களுக்குப் பிறகு 2021 ஆக.24 அன்று மக்கள் பார்வைக்காக மீண்டும் திறக்கப்பட்டது.


இந்நிலையில் ஜுன் 7 அன்று அப்துல்கலாம் தேசிய நினைவகம் பொது மக்கள் பார்வைக்காக திறக்கப்பட்டு 3,237 நாட்கள் ஆன நிலையில் ஞாயிற்றுக்கிழமையுடன் 2 கோடி பார்வையாளர்கள் கலாம் நினைவகத்தைப் பார்வையிட்டுள்ளனர். இந்நிகழ்வை இனிப்பு வழங்கி டி.ஆர்.டி.ஓ அதிகாரிகள் கொண்டாடினர். இந்நிகழ்ச்சியில் கலாமின் பேரன் ஷேக் சலிம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். மேலும் 2 கோடி பார்வையாளர்களைக் கடந்தபோது வந்த மக்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

# செந்தில் பாலாஜி மீது வழக்கு தொடர ஆளுநர் அனுமதி: இறுதிக் கட்டத்தை நெருங்குகிறது விசாரணை

சென்னை, ஜுன்.09–

திமுக எம்எல்ஏவும், முன்னாள் அமைச்சருமான செந்தில் பாலாஜி, அதிமுக ஆட்சியில் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்தபோது, வேலை வாங்கித் தருவதாக கூறி பணம் பெற்று மோசடியில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த விவகாரம் தொடர்பாக சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்தனர்.

இந்த விவகாரத்தில் சட்ட விரோத பணப் பரிமாற்ற தடுப்புச் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறையும் தனியாக வழக்கு பதிவு செய்து விசாரித்தது. செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஓராண்டுக்கும் மேலாக சிறையில் இருந்த அவர், பின்னர் நிபந்தனை ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கில் சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்தது.



முன்னாள் அமைச்சர் என்பதால் செந்தில் பாலாஜி மீது விசாரணை நடத்த மாநில அரசின் அனுமதி அவசியம். அந்த வகையில், செந்தில் பாலாஜி மீது மேல் நடவடிக்கை மற்றும் விசாரணைக்கு அனுமதி கோரி தலைமைச் செயலருக்கு அமலாக்கத் துறை கடந்த மே 15ம் தேதி கடிதம் எழுதியது. அதன் பேரில், ஆளுநருக்கு தமிழக அரசு கடிதம் அனுப்பியதை அடுத்து, ஆளுநரும் அனுமதி அளித்துள்ளார்.

இதுகுறித்து அமலாக்கத் துறை அதிகாரிகள் கூறியுள்ளதாவது: ஆளுநர் அனுமதி அளித்துள்ளதால், இந்த கோப்பு உடனடியாக தலைமைச் செயலகத்துக்கு செல்லும். அதன் பிறகு, செந்தில் பாலாஜி மீது வழக்கு தொடர அனுமதி அளித்து தமிழக அரசு அதிகாரப்பூர்வமாக அரசாணை வெளியிடும். தற்போது எம்.பி., எம்எல்ஏக்களுக்கான சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. அரசாணை வெளியான பிறகு, நீதிமன்றத்தில் அந்த அனுமதி கடிதத்தை அமலாக்கத் துறை தாக்கல் செய்யும். அதன் பின்னர், நீதிமன்றம் செந்தில் பாலாஜி மீதான குற்றச்சாட்டுகளை பதிவு செய்து, வழக்கின் முறையான விசாரணையைத் தொடங்கும். அமலாக்கத் துறை தனது தரப்பு சாட்சிகள் மற்றும் ஆதாரங்களை நீதிமன்றத்தில் முன்னிறுத்தி விசாரணையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும்.

தற்போது ஆளுநரின் அனுமதி கிடைத்துள்ளதால் இந்த வழக்கின் முட்டுக்கட்டை நீங்கி, சிறப்பு நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜிக்கு எதிரான விசாரணை வேகமெடுத்து, இறுதிக் கட்டத்தை நோக்கி நகரத் தொடங்கும். அதே நேரம், அரசு அனுமதி அளித்ததை எதிர்த்தோ, தன் மீதான வழக்கை ரத்து செய்யக் கோரியோ உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜி மேல்முறையீடு செய்ய சட்டப்பூர்வ வாய்ப்புகளும் உள்ளன. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# "தமிழக மக்களின் அமைதியான வாழ்க்கையை அரசு உறுதி செய்ய வேண்டும்" – வேல்முருகன்

சென்னை, ஜுன்.09–

"தமிழகம் முழுவதும் சட்டம் ஒழுங்கு பிரச்சனையை தீவிரமாகக் கையாள முதல்வர் தலைமையில் உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடத்த வேண்டும். தமிழ்நாட்டில் சமூக விரோதிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி, பொதுமக்களின் அமைதியான வாழ்க்கையை உறுதி செய்யவேண்டியது அரசின் கடமையாகும்." என தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அக்கட்சியின் தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திண்டிவனம் அருகே சலூன் கடை உரிமையாளர் ஐந்து பேர் கொண்ட கும்பலால் வெட்டிக் கொல்லப்பட்டார். திருச்சியில் ரவுடி பாதுஷா ஓட ஓட விரட்டி விரட்டிக் கொலை செய்யப்பட்டார்.




சிவகங்கை மாவட்டத்தில், மதுக் குடிப்பகத்தில் பொன்னாம்பட்டியைச் சேர்ந்த தவெக நிர்வாகி நவீன் குமார் மது அருந்திக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த 3 பேர் கொண்ட கும்பல் அவரை வெட்டிக் கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றது. இக்கும்பலைச் சேர்ந்த இருபேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

நீலகிரி மாவட்டம் உதக மண்டலத்தில் உள்ள ஒரு தேயிலைத் தோட்டத்தில் கை, கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் ஓர் ஆணின் உடலை காவல்துறையினர் மீட்டுள்ளனர். சிவகங்கை மாவட்டம், இளையான்குடி அருகே உள்ள கிராமத்தில் வசிக்கும் 4 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்ததாக 12 வயது, 15 வயது சிறார்கள் இருவர் கைது செய்யப்பட்டு சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சென்னை, பெரம்பூரில் தன் கணவனை மனைவியே, ஆண் நண்பருடன் சேர்ந்து வெட்டி கொன்றதாக இருவரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். திருநெல்வேலி மாவட்டம், சீதபற்ப நல்லூர் அருகே பொது இடத்தில் இரு தரப்பினர் மோதிக்கொண்டதில் 7 பேரை அரிவாளால் வெட்டியதாக 7 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

திருச்சி, ஸ்ரீரங்கம் நகர காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில் போதை பொருட்களை பதுக்கி வைத்திருந்ததாக காங்கிரஸ் நிர்வாகி நடராசன் என்பவரை கைது செய்து, அவர் பதுக்கி வைத்திருந்த 2 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் சட்ட விரோதமாக மது, புகையிலை பொருட்களை விற்பனை செய்ததாக 5 பேரை காவல்துறையினர் கைது செய்தனர். திருச்சி கிழக்கு தொகுதியில் உள்ள பாலக்கரையில் 14 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக்க 7 சிறுவர்கள் உட்பட 9 பேரை காவல்துறையினர் போக்ஸோ சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர்.

சேலம் மாவட்டம், மேட்டூர் அருகே தடை செய்யப்பட்ட 227 கிலோ புகையிலை பொருட்களை கடத்திய தவெக நிர்வாகி கைது செய்யப்பட்டார். கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தகரை அருகே 85 வயது மூதாட்டிக்கு பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு தப்பிய நபரை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நாளுக்கு நாள் சீர்குலைந்து வருவதால், மக்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவங்கள் தமிழகத்தில் தொடர்ந்து நடைபெறும் குற்றச் செயல்களின் தொடர்ச்சியாகும்.

கடந்த சில மாதங்களாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. பொதுமக்கள் தங்கள் உயிருக்கு அச்சம் கொண்டு வாழும் நிலை உருவாகியுள்ளது. இந்தக் கொலைகள் சாதாரண தனி நபர் தகராறுகள் மட்டுமல்ல; குற்றவாளிகள் தைரியமாக பகலில், பொது இடங்களில் கொலைகள் செய்து தப்பிச் செல்லும் அளவுக்கு சட்டம் ஒழுங்கு நாளுக்கு நாள் சீர்குலைந்து வருகிறது என்பது இதன் மூலமே தெளிவாகிறது.

ஆளும் அரசு தொடர்ந்து மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கத் தவறிவிட்டது. காவல்துறை முழுமையாக அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால், குற்றவாளிகளுக்கு தைரியம் அதிகரித்துள்ளது. குற்றங்களைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல், வெற்று அறிவிப்புகள் மட்டுமே வெளியிடப்படுகின்றன.

இதனால் ஏழை, நடுத்தர மக்களும், பெண்களும், வியாபாரிகளும் பெரும் அச்சத்தில் உள்ளனர். இக்கொலை வழக்குகளில் உடனடியாக குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும்.

தமிழகம் முழுவதும் சட்டம் ஒழுங்கு பிரச்சனையை தீவிரமாகக் கையாள முதல்வர் தலைமையில் உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடத்த வேண்டும். குற்றப் பின்னணி உள்ளவர்கள் மீது தொடர்ந்து கண்காணிப்பு வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல் நிலையங்களில் புகார் கொடுப்பதற்கு மக்கள் அச்சப்படாத வகையில் அமைப்பு ரீதியான மாற்றங்கள் செய்ய வேண்டும்.கொலை, கொள்ளை உள்ளிட்ட குற்றங்களுக்கு உடனடியாக கடுமையான தண்டனை வழங்கும் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க வேண்டும்.

தமிழகத்தில் மக்கள் அமைதியாக வாழ வேண்டும் என்றால், உடனடியாக சீர்குலைந்து வரும் சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்க வேண்டும். இல்லையென்றால் டாஸ்மாக்கிற்கு எதிரான மக்கள் போராட்டம் போல சட்டம் ஒழுங்குக்கும் மக்கள் போராடும் நிலை உருவாகும். எனவே சமூக விரோதிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி, பொதுமக்களின் அமைதியான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும் என்று வலியுறுத்துகிறேன்." என்று வேல்முருகன் கூறியுள்ளார்.

# நகராட்சி நிர்வாக அதிகாரிகள் 23 பேர் மாற்றம்: 6 மாநகராட்சிகளுக்கு புதிய ஆணையர்கள் நியமனம்

சென்னை, ஜூன்.09–

தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்றதில் இருந்து, ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள், பத்திரப் பதிவுத் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் அதிரடி மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாகத் துறையில் 23 அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதில் 6 மாநகராட்சிகளுக்கு புதிய ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக நகராட்சி நிர்வாகத் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: தாம்பரம் மாநகராட்சி துணை ஆணையர் ஜெ.பிரேம் ஆனந்த், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையராகவும், திருச்சி மாநகராட்சி துணை ஆணையர் கே.பாலா, காரைக்குடி மாநகராட்சி ஆணையராகவும், காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் கே.பாலசுப்பிரமணியன், மாநில தேர்தல் ஆணைய முதன்மை தேர்தல் அதிகாரியாகவும், கரூர் மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, கும்பகோணம் மாநகராட்சி ஆணையராகவும், திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையர் எஸ்.செல்வபாலாஜி, நாமக்கல் மாநகராட்சி ஆணையராகவும், கும்பகோணம் மாநகராட்சி ஆணையர் எம்.காந்திராஜ், புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையராகவும், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் ஜி.கண்ணன், சிவகாசி மாநகராட்சி ஆணையராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகராட்சி நிர்வாகத் துறை சேலம் மண்டல இயக்குநர் பி.அசோக்குமார், ஈரோடு மாநகராட்சி துணை ஆணையராகவும், சிவகாசி மாநகராட்சி ஆணையர் கே.சரவணன், நகராட்சி நிர்வாகத் துறை தஞ்சாவூர் மண்டல இயக்குநராகவும், திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையர் எஸ்.சித்ரா, நகராட்சி நிர்வாகத் துறை சேலம் மண்டல இயக்குநராகவும், கோவை மாநகராட்சி துணை ஆணையர் ஏ.சுல்தானா, திருச்சி மாநகராட்சி துணை ஆணையராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாமக்கல் மாநகராட்சி ஆணையர் கே.சிவக்குமார், சென்னை மாநகராட்சி உதவி ஆணையராகவும், ஈரோடு மாநகராட்சி துணை ஆணையர் ஆர்.சரஸ்வதி, கோவை மாவட்ட துணை ஆணையராகவும், புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் டி.நாராயணன், தாம்பரம் மாநகராட்சி துணை ஆணையராகவும், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் எம்.செந்தில் முருகன், திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையராகவும், நகராட்சி நிர்வாகத் துறை திருநெல்வேலி மண்டல இயக்குநர் ஆர்.மகேஸ்வரி, சேலம் மாநகராட்சி துணை ஆணையராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சேலம் மாநகராட்சி துணை ஆணையர் வி.நவீந்திரன், நகராட்சி நிர்வாகத் துறை திருநெல்வேலி மண்டல இயக்குநராகவும், கடலூர் மாநகராட்சி முன்னாள் ஆணையர் பி.எம்.என். முஜிபீர் ரஹ்மான், திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையராகவும், நகராட்சி நிர்வாகத் துறை தஞ்சாவூர் மண்டல இயக்குநர் பி.விஜயலட்சுமி, நகராட்சி நிர்வாக இயக்குநரக மாநகராட்சி பிரிவு இணை இயக்குநராகவும், கண்காணிப்பு பிரிவு இணை இயக்குநர் கே.அச்சய்யா, நகராட்சிகள் பிரிவு இணை இயக்குநராகவும், நிர்வாகப் பிரிவு இணை இயக்குநர் எஸ்.சசிகலா, பொது சுகாதாரப் பிரிவுக்கும், மாநகராட்சிகள் பிரிவு இணை இயக்குநர் எஸ்.பாரிஜாதம், சாலை, பாலங்கள், தெருவிளக்குகள் பிரிவுக்கும், திட்டங்கள் பிரிவு இணை இயக்குநர் கே.உமாமகேஸ்வரி, கண்காணிப்புப் பிரிவுக்கும் மாற்றப்பட்டுள்ளனர். இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்க முடியாத நிலை: டிடிவி.தினகரன்

சென்னை, ஜூன்.09–

குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்க முடியாத நிலை உள்ளது என டிடிவி. தினகரன் தெரிவித்துள்ளார். மேட்டூர் அணை திறக்கப்படாததால் விவசாயிகள் மட்டுமல்ல, விவசாய தொழிலாளர்களும் வேலையிழக்கும் நிலை உள்ளது.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்;

குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்க முடியாத நிலை மாற்று ஏற்பாடுகளை தவெக அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார். காவிரி டெல்டா மாவட்டங்களைச் சார்ந்த ஒட்டுமொத்த விவசாயிகளின் வாழ்வாதாரமாகத் திகழும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 80 அடிக்கும் குறைவாக இருப்பதால் நடப்பாண்டு குறுவை சாகுபடிக்கான தண்ணீர் ஜூன் 12 ஆம் தேதி திறக்க வாய்ப்பில்லை என செய்திகள் வெளியாகியுள்ளன.

முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது கடந்த ஆண்டு 6 லட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி செய்யப்பட்ட நிலையில், நடப்பாண்டில் உரிய நேரத்தில் மேட்டூர் அணை திறக்கப்பட வாய்ப்பில்லை என்பதால் குறுவை சாகுபடியே கேள்விக்குறியாகியுள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை பெய்யாததாலும், கர்நாடகாவில் இருக்கும் முக்கிய அணைகளில் நீர் இருப்பு மிகக் குறைவாக இருப்பதாலும் தண்ணீர் திறக்க வாய்ப்பில்லை என்பதால் விவசாயம் மட்டுமல்லாது அதனையே நம்பியிருக்கும் பல லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்டு அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தவெக என்பது புதிய அதிமுக என்று பேசும் தவெக அமைச்சர்கள், இதுபோன்ற இயற்கை இடர்பாடுகள் நிறைந்த சூழல் நிலவும் போது இதயதெய்வம் அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்போடு, நிலத்தடி நீரின் மூலமாகக் குறுவை சாகுபடியை மேற்கொள்ள முன்வரும் விவசாயப் பெருமக்களுக்கு மும்முனை மின்சாரத்தையும் தடையின்றி வழங்கிட முன்வர வேண்டும் என விவசாயிகள் மத்தியில் கோரிக்கை எழுந்துள்ளது.

திருவாரூர் உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்களில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் மின் தடையால், மின் மோட்டார்கள் பழுதடைவதும், போதிய நீர் பாய்ச்ச முடியாமல் அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ள நெற்பயிர்கள் காய்ந்து வீணாவதாலும் விவசாயிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும், டெல்டா பகுதியைத் தவிர தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் அரைவைக்கு அனுப்பப்படாமல் கொள்முதல் நிலையங்களிலேயே தேக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும், விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கொள்முதல் தொகையும் நிலுவையில் இருப்பதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

ஆகவே, அகில இந்திய காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியில் இருக்கும் தவெகவின் தலைவர் ஜோசப் விஜய் விரைவில் டெல்லி செல்லவுள்ளதாகத் தகவல் வரும் நிலையில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர்களைச் சந்தித்து தமிழகத்திற்கான காவிரி நீரை உரிய நேரத்தில் திறந்து விடுமாறு கர்நாடக முதலமைச்சர் DK.சிவக்குமார் உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதோடு, காவிரியின் குறுக்கே மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் என்ற கர்நாடக அரசின் பிடிவாதத்தைக் கைவிடும் உத்தரவாதத்தையும் பெற வேண்டும் எனவும் வலியுறுத்துகிறேன் என இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



► பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், தண்டையார்பேட்டை மண்டலம், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீ தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாகப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது மண்டல அலுவலர் ராஜ்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தவெக ஆட்சி 3 மாதமாவது தாங்குமா என்பது கேள்விக்குறி: திமுக தலைவர் ஸ்டாலின் விமர்சனம்




சென்னை, ஜூன்.09–

விசிக முன்னாள் எம்எல்ஏ பனையூர் பாபு, ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். இந்த நிகழ்வில், இன்னும் 3 மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடு தான் தவெக ஆட்சி நடந்து வருவதாக ஸ்டாலின் விமர்சித்தார்.

கடந்த 2021 சட்டப் பேரவை தேர்தலில் விசிக சார்பில் செய்யூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் பனையூர் பாபு. விசிக ஊடகப் பிரிவு முதன்மைச் செயலாளராகவும் இருந்து வந்தார். 2026 தேர்தலில் அதே தொகுதியில் சீட் மறுக்கப்பட்டதால் அதிருப்தியில் இருந்தார்.

தேர்தலுக்குப் பிறகு, தவெகவுக்கு ஆதரவளித்த விசிக, திமுக கூட்டணியில் இருந்து வெளியேறி, அமைச்சரவையிலும் பங்கேற்றது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து விசிகவில் இருந்து பனையூர் பாபு கடந்த மே 24ம் தேதி விலகினார்.

இந்நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவர் ஸ்டாலின் முன்னிலையில் பனையூர் பாபு தனது ஆதரவாளர்களுடன் நேற்று திமுகவில் இணைந்தார். தவெக, அதிமுக, காங்கிரஸ், மதிமுக உள்ளிட்ட கட்சிகளில் இருந்தும் 1,000க்கும் மேற்பட்டோர் திமுகவில் இணைந்தனர்.

இந்த நிகழ்வில் திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி., பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் ஸ்டாலின் பேசியதாவது: சட்டப்பேரவையில் ஆக்கப்பூர்வமான கருத்துகள், பிரச்சினைகளை வலியுறுத்திப் பேசக்கூடியவர் பனையூர் பாபு. ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக தனது பயணம் இருக்கும் என்று அவர் கூறியுள்ளார். அதற்கு சரியான இயக்கம் திமுக என்பதை உணர்ந்து இங்கு இணைந்துள்ளார்.

தவெக ஆட்சி பற்றி நான் அதிகம் சொல்லத் தேவை இல்லை. ஏற்கெனவே இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், ‘6 மாதங்களுக்கு இதைப் பற்றி பேசப் போவதில்லை’ என்றேன். ஆனால், 6 மாதங்களுக்கு முன்பே பேச வேண்டிய சூழ்நிலை வந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன்.

6, 5, 4 மாதங்கள் கூட அல்ல, இன்னும் 3 மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடு தான் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு அவர் பேசினார். பனையூர் பாபு பேசும்போது, ‘‘தலித் மாணவர்கள் அயலகம் சென்று படிக்கும் திட்டத்தில் ஆண்டுக்கு 10 பேர் கூட பயனடையாத நிலை இருந்தது.

ஸ்டாலின் தலைமையில் திமுக அரசு அமைந்த பிறகு, கடந்த 5 ஆண்டுகளில் 410 மாணவர்கள் வெளிநாடு சென்று படிக்கின்றனர்.

ஒரு மாணவருக்கு தலா ரூ.36 லட்சம் வரை அரசு வழங்கியுள்ளது. ஆனால், ஒரு கவர்ச்சியான அரசியலின் பின்னால் சென்ற மக்கள், எல்லாம் பொய் என்பதை 30 நாட்களிலேயே உணர்ந்துவிட்டனர்” என்றார்.

# மின்வெட்டு குறித்து கருத்து: தவெக எம்எல்ஏ பல்லவிக்கு திமுக தரப்பில் அவதூறு நோட்டீஸ்

சென்னை, ஜூன்.09–

தமிழகத்தில் ஏற்படும் மின்வெட்டு பிரச்சினைக்கு திமுகவினர்தான் காரணம் என்று தெரிவித்ததால், தவெக எம்எல்ஏ பல்லவிக்கு அவதூறு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது’ என திமுக செய்தித் தொடர்பாளர் சரவணன் அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தவெக அரசுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை; அவர்கள் முற்றிலும் குழம்பிப் போயிருக்கிறார்கள். மின்வெட்டு பிரச்சினையை சமாளிக்க முதல்வரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

தமிழகத்தில் கோடைக்காலம் உக்கிரமாக இருப்பது இது முதன்முறை அல்ல. இதற்கு முன்பும் இதேபோல் தான் இருந்தது. ஆனால், அப்போதெல்லாம் எங்களிடம் திறமையான நிர்வாகிகளும் அதிகாரிகளும் இருந்ததால், நிலைமையை சீராகக் கையாள முடிந்தது.

தற்போதைய சூழலில், தவெக அமைச்சர்கள் ஆளுக்கொன்றாக முரண்பட்ட கருத்துகளை கூறி வருகிறார்கள். மின்வெட்டு பிரச்சினையை எப்படி சமாளிப்பது என்று தவெக அரசுக்கு தெரியவில்லை.

அவர்களின் நிர்வாகத் தோல்வியை திசை திருப்புவதற்காக, திமுக மீது எவ்வித ஆதாரமும் இல்லாத, பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகிறார்கள்.

தமிழகத்தில் ஏற்படும் மின்வெட்டு பிரச்சினைக்கு திமுகவினர்தான் காரணம் என்று திருவிக நகர் தொகுதி தவெக எம்எல்ஏ பல்லவி மிகவும் பொறுப்பற்ற முறையில் ஒரு கருத்தை தெரிவித்துள்ளார்.

அதற்காகத்தான் அவருக்கு தற்போது அவதூறு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. தனது பொய்யான குற்றச்சாட்டுக்காக அவர் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மின்வாரிய தலைமை அலுவலக ஹார்டு டிஸ்க் திருட்டு வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றம்

சென்னை, ஜூன்.09–

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமையகத்தில் இருந்து ஹார்டு டிஸ்க்குகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் இவ்வழக்கின் விசாரணை சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

சென்னை, அண்ணா சாலையில் தமிழ்நாடு மின் வாரிய தலைமை அலுவலகத்தில் கம்ப்யூட்டர் பிரிவில் 34 ஹார்டு டிஸ்க்குகள் அண்மையில் திருடு போன சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் தொடர்பாக மின்வாரியம் சார்பில் சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு மின் வாரிய தலைமை அலுவலகத்தில் திருடுபோன 34 ஹார்டு டிஸ்க்குகளும், ரூ.75 ஆயிரத்துக்கு பெங்களூருவில் விற்பனை செய்யப்பட்டது தெரியவந்தது. அவற்றை வாங்கியவரையும் போலீஸார் கைது செய்துள்ளனர். போலீஸாரின் விசாரணையில் மின்வாரிய தலைமை அலுவலகத்தில் கம்ப்யூட்டர்களை மேற்பார்வையிடும் ஒப்பந்த ஊழியரான கோபிநாத் (31) என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் கம்ப்யூட்டர் ஹார்டு டிஸ்க்குகளை திருடி, பெங்களூருவில் உள்ள ஒரு காம்ப்ளக்ஸ் கடையில் விற்பனை செய்தது தெரியவந்தது. இதையடுத்து தனிப்படை போலீஸார் பெங்களூரு விரைந்து 34 ஹார்டு டிஸ்க்குகளையும் கைப்பற்றினர். கைதான கோபிநாத்திடம் விசாரித்த போது, திருடிய ஹார்டு டிஸ்க்குகளில் உள்ள தகவல்களை அழித்துவிட்டு ரூ.75 ஆயிரத்துக்கு விற்பனை செய்ததாக தெரிவித்துள்ளார். அதில் சதி திட்டம் ஏதும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார். இதற்கிடையே ஹார்டு டிஸ்க்குகளை வாங்கிய பெங்களூரு காம்ப்ளக்ஸ் கடை உரிமையாளர் கர்நாடகா மாநிலம், பெங்களூரு தெற்கு பகுதியைச் சேர்ந்த முரளி மனோகர் (32) கைது செய்யப்பட்டார்.

அவரிடமும் போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், சென்னை காவல் துறை, டிஜிபியிடம் பரிந்துரை செய்ததன்பேரில், இவ்வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் வழக்கு விசாரணை சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. பல்வேறு கோணங்களில் இவ்வழக்கின் விசாரணை நடைபெற உள்ளதாக கூறப்படுகிறது.

# விஸ்வரூபம் எடுத்துள்ள மின்வெட்டு பிரச்சினை: இரவு நேரங்களில் வீதிகளில் இறங்கி போராடும் மக்கள்



சென்னை, ஜூன்.09–

விஸ்வரூபம் எடுத்துள்ள மின்வெட்டு பிரச்சினையால், பொது மக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர். இரவு நேரங்களில் தூக்கத்தை தொலைத்து வீதிகளில் இறங்கி மக்கள் போராடி வருகின்றனர்.

தமிழகத்தில் கடந்த மே மாத இறுதியில் அக்னி நட்சத்திரம் காரணமாக வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது. பகல் நேரங்களில் மக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத அளவுக்கு வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது.

மேலும், இரவு நேரங்களிலும் வெப்பத்தின் தாக்கம் காணப்பட்டது. இதனிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இரவு நேரங்களில் நீண்ட நேரம் மின்சாரம் தடைபட்டது.

இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். பொதுமக்கள் சாலைகளில் இறங்கி போராட்டங்களை நடத்தினர். இதையடுத்து, சில நாட்கள் மின்வெட்டு பிரச்சினை ஏற்படாமல் இருந்தது.

ஆனால், கடந்த சில நாட்களாக மீண்டும் இரவு நேரங்களில் மின்வெட்டு பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளது. நள்ளிரவு நேரங்களில் ஏற்படும் மின்வெட்டு காரணமாக குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயாளிகள் தூக்கமின்றி தவித்து வருகின்றனர்.

மின்தடை குறித்துப் பொதுமக்கள் மின்வாரிய அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு புகார் அளிக்க முயன்றால், முறையான பதில்கள் அதிகாரிகளிடம் இருந்து கிடைப்பதில்லை என்றும், தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்படுவதாகவும் மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

மக்கள் போராட்டம்

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மின்வெட்டு பிரச்சினை தீவிரமாக உள்ளது. ஒருசில இடங்களில் பல மணி நேரம் மின்வெட்டு ஏற்படுகிறது. குறிப்பாக, முதல்வர் விஜய்யின் பெரம்பூர் தொகுதியில் உள்ள வியாசர்பாடி பகுதியில் நேற்றுமுன்தினம் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக, முதல்வர் விஜய் வசிக்கும் நீலாங்கரை பகுதியிலும் நேற்றுமுன்தினம் மின்வெட்டு ஏற்பட்டது. இதனால், பொதுமக்கள் கூடுவாஞ்சேரி மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். முட்டுக்காடு பகுதியில் திருப்போரூர் எம்எல்ஏ விஜயராஜிடம் பெண்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அவர்களை எம்எல்ஏ சமாதானம் செய்ய முயன்றார்.

திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அடுத்த ஆரணியிலும் மின்வெட்டு கண்டித்து மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதுகுறித்து, மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது: பெரம்பூர் தொகுதியில் தாழ்வழுத்த மின் கம்பியில் ஏற்பட்ட பழுது காரணமாக மின்தடை ஏற்பட்டது.

உடனடியாக, மாற்று கம்பிகளை பொறுத்தி அந்த பிரச்சினைக்கு தீர்வு கண்டோம். இரவு நேரங்களில் மின்தடை ஏற்பட வெப்பமும், அதிக சுமையும் முக்கிய காரணிகளாக உள்ளன. மின்விநியோக கட்டமைப்பில் இருக்கும் கருவிகளில் அதிக வெப்பம் ஏற்படும் போது அவை பழுதடைகின்றன.

மின்னகம் சேவை மையம்

இரவு நேரங்களில் மின்வெட்டு ஏற்படும் போது மக்கள் கோபமடைவது நியாயம் தான். இருந்தாலும் உடனடியாக அந்த பகுதியின் உதவி பொறியாளருக்கு தொடர்ந்து அழைத்து அவர்களிடம் கேட்பது, சீரமைப்பு பணிகளை பாதிக்கிறது. மக்கள் மின்னகம் சேவை மையத்தை 94987 94987 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு புகார் அளித்தாலே போதுமானது.

மக்கள் அளிக்கும் புகார் எங்கள் பொறியாளர்களுக்கு தெரிந்துவிடும், பிரச்சினை சரி செய்யப்பட்டதை மக்களும் உறுதி செய்து கொள்ள முடியும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

மின்வெட்டு உண்மைதான்

இதுகுறித்து, தமிழக மின்வாரிய தலைவர் ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறுகையில், “இரவு நேரங்களில் மின்வெட்டு ஏற்படுவது உண்மைதான். அதனை நாங்கள் மறைக்கவோ? மறுக்கவோ தயங்கவில்லை.

இப்பிரச்சினை மின்விநியோகத்தினால் ஏற்படும் பிரச்சினை இல்லை. பகிர்மானத்தால் நடைபெறுகிறது. வருங்காலங்களில் மின்தேவை அதிகரிப்பதால், பகிர்மானத்தை எப்படி உறுதியாக வைத்துக் கொள்ள வேண்டும் என தொலைநோக்கு பார்வையில் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது.

பொதுமக்கள் தங்களது குறைகளைச் சுட்டிக்காட்டும் போது அதனைக் கனிவுடன் பரிசீலித்து, அதற்கான பொறுப்பான பதிலைப் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது” என்றார்.



# “6,400 போதை ஊசி குப்பிகள் அதிரடி பறிமுதல்!” சேலத்தில் பெண் உட்பட இருவர் கைது! அனல் பறக்கும் போலீஸ் ஆக்ஷன்!

சேலம், ஜூன்.9-
சேலம் மாநகர காவல் துறை எல்லைக்குட்பட்ட பகுதியில், போதைக்காகத் தவறாகப் பயன் படுத்தப்படும் வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் ஊசிகளைச் சட்டவிரோதமாக விற்பனை செய்த பெண் உட்பட இருவரை அன்னதானப்பட்டி போலீஸார் அதிரடியாகக் கைது செய்து, 6,400 ஊசி மருந்து குப்பிகளைப் பறிமுதல் செய்துள்ளனர்.மாநகர காவல்ஆணையாளர் அனில்குமார் கிரி ஐபிஎஸ் அவர்களுக்குக் கிடைத்த தகவலின்படி, அன்னதானப்பட்டி உதவி காவல் ஆணையாளர் தலைமையில் சட்டம் ஒழுங்கு மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு போலீஸார் இணைந்து அமைத்த சிறப்புப் பணிப்படை குழு, தாதகாப்பட்டி மேட்டுத் தெரு பகுதியில் அதிரடி சோதனை நடத்தியது. இதில், உரிய மருத்துவப் பரிந்துரைச் சீட்டு இல்லாமல் போதைக்காக மாத்திரைகள் மற்றும் ஊசிகளை விற்பனை செய்துவந்த தாதகாப்பட்டியைச் சேர்ந்த மேகலா (48), நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தைச் சேர்ந்த முகமது வதூத் (33) ஆகிய இருவரைப் போலீஸார் மடக்கிப் பிடித்தனர்.விசாரணையில், முகமது வதூத் இந்த போதை மருந்துகளை மொத்தமாக வாங்கி வந்து மேகலாவிடம் கொடுக்க, அவர் அதனைப் பொதுமக்களுக்கும் இளைஞர்களுக்கும் கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வந்தது அம்பலமானது. இதனையடுத்து, இருவரையும் கைது செய்த போலீஸார், அவர்களிடம் இருந்த 6,400 போதை ஊசி குப்பிகளைக் கைப்பற்றினர். இது தொடர்பாக அன்னதானப்பட்டி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, இருவரும் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சேலம் மாநகரில் போதைப்பொருள் நடமாட்டத்தை ஒழிக்கத் தொடர்ந்து தீவிர அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாநகர காவல் ஆணையாளர் எச்சரித்துள்ளார்.

# திருப்பூர் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் மாநகர் மாவட்ட செயல் வீரர்கள் மற்றும் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம்

திருப்பூர் ஜூன்.9-
அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் சார்பில், திருப்பூர் மாநகர் மாவட்ட செயல் வீரர்கள் மற்றும் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் ஓம் சக்தி கோயில் சாலையில் உள்ள தனியார் திருமண மஹாலில் மிக விமரிசையாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அமக திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் இறை ஆர். வெங்கடேஷ் தலைமை தாங்கினார். மாநில சிறுபான்மை பிரிவு இணைச்செயலாளர் ஜான் மகேஸ்பிரன்ஸ்சுவா முன்னிலை வகித்தார்.




இந்நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சரும் கழகத் துணைப் பொதுச்செயலாளருமான உடுமலை சண்முகவேலு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, புதிய நிர்வாகிகளை முறைப்படி அறிமுகம் செய்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.இம்மாபெரும் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரோகிணி கிருஷ்ணகுமார், ஈரோடு மாவட்ட செயலாளர்கள் மதிவாணன், திருநாவுக்கரசு, வெங்கடேஷ், கோவை மாவட்ட செயலாளர்கள் பாஸ்கர், சதீஷ், திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர் ஆனந்த் குமார், மாவட்ட அவைத் தலைவர் புல்லட் ரவி, மாவட்டத் துணைச் செயலாளர் சுரேஷ் ராஜா, மாவட்ட இணைச்செயலாளர் கீதா, பொதுக்குழு உறுப்பினர் நாகேந்திரகுமார், மாவட்ட பொருளாளர் குமரவேல் உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்ட, ஒன்றியக் கழக மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், தொண்டர்கள் எனப் பலரும் திரளாகப் பங்கேற்றனர்.



# தென்காசியில் சமூகநலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரிக்கு தவெக அதிரடி வரவேற்பு!

தென்காசி, ஜூன்.9-
தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தமிழக சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் மாண்புமிகு ஜெகதீஸ்வரி அவர்களுக்கு, தமிழக வெற்றிக்கழக வடக்கு மாவட்டம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.பெற்ற நினைவுப் பரிசு!இந்த நிகழ்வில், தமிழக வெற்றிக்கழக வடக்கு, மாவட்ட செயலாளர் மாரியப்பன் அவர்கள் அமைச்சருக்கு நினைவுப் பரிசு வழங்கி உற்சாக வரவேற்பு அளித்தார். நிகழ்வில் சிவ கண்ணன், வழக்கறிஞர் பூபதி, மணிகண்டன், சௌந்தர பாண்டியன், ஜான்சன், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி தொண்டர்கள் அமைச்சரை நேரில் சந்தித்து தங்களது வரவேற்பையும் அளித்தனர்.



# தொகுதி மேம்பாட்டுக்காகப் பாய்ந்த மனுக்கள்!

தென்காசி, ஜூன்.9-
தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சரிடம் கடையநல்லூர் எம்.எல்.ஏ அதிரடி சந்திப்பு! தொகுதி மேம்பாட்டுக்காகப் பாய்ந்த மனுக்கள்!கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 493 கிராமங்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய ₹640 கோடி மதிப்பிலான தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் காட்டுப்பன்றிகள் தொல்லையை ஒழிக்கக் கோரி, தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி.கே.இராஜீவ் அவர்களிடம் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்திரன் அவர்கள் அதிரடி கோரிக்கை மனு அளித்துள்ளார். தென்காசி மாவட்டத்திற்குப் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சரும், மாவட்ட பொறுப்பு அமைச்சருமான மாண்புமிகு வி.கே.இராஜீவ் அவர்களை, கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்திரன் அவர்கள் நேரில் சந்தித்துப் பேசினார்.அப்போது, கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடையநல்லூர் நகராட்சி, கடையநல்லூர் ஒன்றியம், செங்கோட்டை ஒன்றியம், தென்காசி ஒன்றியம் உள்ளிட்ட மாவட்டத்தின் இதரப் பகுதிகளைச் சேர்த்து, ஒரு நகராட்சி மற்றும் 80 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 493 கிராமங்களுக்குத் தாமிரபரணி ஆற்றில் இருந்து கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வசதி செய்திட ₹640 கோடி மதிப்பில் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என மனு அளித்தார். மேலும், மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரம் மற்றும் இதர பகுதிகளில் விவசாய நிலங்களைச் சேதப்படுத்தி வரும் காட்டுப்பன்றிகளை ஒழித்து, விவசாயிகளைக் காக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் வலியுறுத்தியுள்ளார்.



# சங்கரன்கோவிலில் அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா

தென்காசி, ஜூன்.9-
தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் நீதிமன்றம் அருகில், திறப்பு விழா அ.இ.அ.தி.மு. பொதுச்செயலாளர் எடப்பாடியார் ஆணைக்கு இணங்கி, சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திலீபன் ஜெய்சங்கர் கடையநல்லூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா ஐயர் கலந்து கொண்டு சட்டமன்ற அலுவலகத்தை திறந்து வைத்தார்கள். இதில் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் ஏராளமான உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அன்னதானம் வழங்கி மிக சிறப்பாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது.



# ”மறைந்த தூய்மைப் பணியாளர் குடும்பத்திற்கு தோள் கொடுத்த தோழர்கள்! சிஐடியு (CITU) தொழிற்சங்கம் சார்பில் ₹11,000 நிதியுதவி வழங்கி மனிதநேயம்!

திருமுருகன்பூண்டி, ஜூன்.9-
திருமுருகன்பூண்டி நகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணியாற்றி, சமீபத்தில் காலமான தொழிலாளியின் குடும்பத்திற்குத் திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை ஊழியர் சங்கம் (சிஐடியு) சார்பில் முதற்கட்டக் குடும்ப நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. திருப்பூர் அருகே உள்ள திருமுருகன்பூண்டி நகராட்சியில் தூய்மைப் பணியாளராக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வந்தவர் ராக்கியாபாளையம், குன்னங்கள் காடு பகுதியைச் சேர்ந்த 'சுறா' என்கிற சுரேஷ். இவர் கடந்த மே 26 ஆம் தேதி (26.05.2026) அன்று திடீரென ஏற்பட்ட உடல் நலக்குறைவால் காலமானார். அவரது மறைவு அப்பகுதி மக்கள் மற்றும் சக தூய்மைப் பணியாளர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில், வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்குத் தோள் கொடுக்கும் விதமாக, திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை ஊழியர் சங்கம் (CITU) மற்றும் சக தூய்மைப் பணியாளர்கள் ஒன்றிணைந்து நிதி திரட்டினர். மறைந்த சுரேஷின் இல்லத்திற்கு நேரில் சென்ற சங்க நிர்வாகிகள், அவரது குடும்பத்தாரிடம் முதற்தவணையாக ரூபாய் பதினோராயிரத்தை (ர11,000) குடும்ப நிதியாக வழங்கி தங்களது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டனர்.

# மதுரையில் யூடியூபர் மாரிதாஸ் கைது: சென்னை சைபர் கிரைம் அதிரடி

மதுரை, ஜூன்.9-
மதுரையில் யூடியூபர் மாரிதாஸை, சென்னை சைபர் கிரைம் போலீசார் இன்று காலை அதிரடியாக கைது செய்தனர். மதுரையில் உள்ள சூரியா நகரைச் சேர்ந்தவர் மாரிதாஸ், பிரபல யூடியூபர். பாஜவின் தீவிர ஆதரவாளரான இவர், தமிழ்நாட்டில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றி கழக அரசையும், முதல்வர் விஜய் மற்றும் அமைச்சர்கள் குறித்தும்,



அரசின் செயல்பாடுகள் குறித்தும் விமர்சித்து வீடியோக்களை வெளியிட்டு வருகிறார். தொடர்ந்து தமிழ்நாடு அரசை விமர்சித்து வருகிறார்.இந்த நிலையில், சென்னை மாநகர சைபர் கிரைம் போலீசார், அவருக்கு எதிராக பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இதன்படி, சென்னையிலிருந்து இன்று காலை மதுரைக்கு வந்த சென்னை சைபர் கிரைம் தனிப்படை போலீசார், மதுரை மாநகர காவல் துறையுடன் இணைந்து சூரியா நகரில் உள்ள மாரிதாஸின் வீட்டிற்கு சென்றனர். அங்கு மாரிதாஸை கைது செய்து காவல்துறை வாகனத்தில் சென்னைக்கு அழைத்துச் சென்றனர்



# மாற்றுத்திறனாளிக்கு ₹15,750 மதிப்பிலான சக்கர நாற்காலி! தென்காசி மாவட்ட ஆட்சியரின் நெகிழ்ச்சியான நிதியுதவி!

தென்காசி, ஜூன்.9-
தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம்கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.15,750/ மதிப்பிலான சக்கர நாற்காலியினைமாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.
இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 517 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, உதவி ஆணையர் (கலால்) ராமச்சந்திரன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) (பொ) பால்துரை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) காளிமுத்து மற்றும் அனைத்துதுறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# நீட் வினாத்தாளை கொண்டு செல்லும் பணியில் இந்திய விமானப்படை: பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் தகவல்

டெல்லி, ஜூன்.9-
நீட் வினாத்தாளை கொண்டு செல்லும் பணியில் இந்திய விமானப்படை ஈடுபடவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளது. "நாடு முழுவதும் 18 இடங்களுக்கு வினாத்தாள் தொகுப்புகளை கொண்டு செல்லும் பணி நடைபெறும். நீட் மறுதேர்விற்கான தளவாட உதவியை இந்திய விமானப்படை வழங்கும்




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000